1967 ஜூலை 8]

அரசாங்க மருத்துவமனை, சீர்காழி

*218. வினா.—திரு. கே. பி. எஸ். மணி: மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சீர்காழி தாலூக்காவின் தலைநகரில் உள்ள சர்க்கார் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் கடந்த 10 ஆண்டுகளாக பரிசீலனை செய்து முடிவாகி இருப்பதை நடப்பு ஆண்டில் பூர்வாங்க வேலை துவக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சீர்காழி, அரசாங்க மருத்துவ மனையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நிலத்தை கைவசப்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

குமராட்சி பஞ்சாயத்து யூனியனுக்குக் கட்டடம்

*219 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவிற்கு, குமராட்சி யூனியன் ஆபீசுக்கென புதிய கட்டடம் ஒன்று கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) புதிய கட்டடம் கட்ட தகுந்த இடம் கிடைக்குமா என பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: குமராட்சி யூனியன் ஆபீசுக்கென சிதம்பரம் டவுன் ஓரம் ஒரு கட்டடம் கட்ட முயற்சி இருந்ததே, அதன் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குமராட்சி யூனியன் ஆபீஸ் கட்டடம் கட்ட புறம்போக்கு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த இடம் வெள்ளக்காலத்தில் சேதம் அடையக்கூடிய பகுதியாக இருந்ததால் அந்தத்திட்டம் கைவிடப்பட்டது. இப்போதிருக்கும் கட்டடத்தைக் கட்டியவர் அந்தக் கட்டடத்தை விலைக்குக் கொடுக்க இருப்பதாக ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு தீர்மானம் போடப்பட்டு, வந்திருக்கிறது. அந்த இடம் தகுந்த இடமா என்று ஆராயப்பட்டு பின்னர் முடிவெடுக்கப்படும்.